மாகாணக் கல்வித் திணைக்களம் சப்ரகமுவ - வாராந்த பாடசாலை

Department of Education,Sabaragamuwa Province/ Weekly School

வாரம் – 12 (10th Jan - 16th Jan 2021 )

பாடம் – தமிழ்

தயாரிப்பு – திரு ப. ஜிவிதரன்
கே/ தெஹி/ தேஹியோவிற்ற த. ம. வி.

தரம் - 10

## தமிழ் மொழியும் இலக்கியமும்

ஒன்று தொடக்கம் 10 வரையான வினாக்களுக்கு பொருத்தமான விடையை தெரிவு செய்க.

1) "மடைத் தலையில் ஓடுமீன் ஓட...." இங்கு **மடைத்தலை** என்பதன் பொருள்
1.கொக்கு 2.பெரிய 3.வாய்க்கால் 4.மீன்

2) ."மந்தி சிந்தும் கனிகளுக்கு வான்கவிகள் கொஞ்சும்...."என்பதில் **வான்கவிகள்** என்பதன் பொருள்
1.வானம் 2.பாட்டு 3.தேவர்கள் 4.குரங்குகள்

3) "மூன்றுலகு மீன்றானை முன்னீன்றானை....." இங்கு **மூன்றுலகு மீன்றானை** என குறிப்பிடுவோர்
1.சிவன் 2.இராமர் 3.பிரம்மன் 4.முருகன்

4) **"பேதமையுள் எல்லாம் பேதமை"** இங்கு **பேதமை** என்பதன் பொருள்
1.அறியாமை 2.அறிஞர் 3.அரசன் 4.அறிவிலி

5) **நிலை, தனு, சாபம்** எனும் சொற்களுக்கு நிகரான சொல்
1.மேகம் 2.மாலை 3.சிங்கம் 4.வில்

6) **குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை** என்பன
1.ஐம்பொறி 2.ஐந்நிலம் 3.ஐம்பூதம் 4.ஐங்காப்பியம்

7) கிளி பேசும் என்பது போல் பல்லி...
1.சொல்லும் 2.பேசும் 3.இழையும் 4. அழும்

8) '**பொன்விழா**' கொண்டாடப்படும் ஆண்டு
1.நூற்றாண்டு 2.ஐம்பது 3.எண்பத்தைந்து 4.அறுபது

9) '**னுபைவையட**' என்பதன் பொருள்
1.வலைத்தளம் 2.இணையம் 3.அணிந்துரை 4.கட்டுரை

10) நூலுக்கு நூலாசிரியர் எழுதும் உரை

1. பதிப்புரை 2. நூன்முகம் 3.அணிந்துரை 4.கட்டுரை

********

<u>பின்வரும் வினாக்களில் காணப்படும் இடைவெளிக்கு பொருத்தமான சொற்களைத் தெரிவு செய்க.</u>

11) அகில இலங்கை தமிழ் தினப் போட்டிக்கான.................... கல்வி அமைச்சினால் பாடசாலைக்கு அனுப்பப்பட்டது.

1. அறிக்கை 2.சுற்றுநிறுபம் 3.வேண்டுகோள் 4. முறைப்பாடு

12) எமது நாட்டின் கைத்தொழிற்றுறையில் ……………..செய்வதற்கு பல நாடுகள் முன்வந்துள்ளன.

1. முதலீடு 2.காப்பீடு 3.பங்கீடு 4.வரி அறவீடு

13) இவ் ஆண்டு சனத்தொகை…………………மேற்கொள்ளப்பட்டது.

1.கணிப்பீடு 2.வகையீடு 3. திறனாய்வு 4.மதிப்பீடு

14) யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு தமது இருப்பிடத்தை இழந்த மக்கள் மீண்டும் தமது சொந்த இடங்களில் .......................... செய்யப்பட்டனர்.

1.மீள்குடியேற்றம் 2. பிரவேசம் 3. புனர்வாழ்வு 4. இழப்பீடு

15) .பாராளுமன்ற உறுப்பினர்களின் பெயர் விபரம் அரச ........................ இல் வெளியிடப்பட்டது.

1.சஞ்சிகை 2.வர்த்தமானி 3.பத்திரிகை 4.ஆண்டறிக்கை.

**********

## <u>பகுதி 2</u>

<u>சுருக்கமான விடை தருக.</u>

1. பின்வரும் தொடரைப் பிரித்து எழுதுக.
   பெருந்தடங்கட்பிறைநுதல்

2. சமுகம், சமூகம் எனும் சொற்களை பொருள் புலப்பட வாக்கியம் ஆக்குக.

3.சார்பெழுத்துக்கள் 2 தருக.

4. வானம் இருண்டு இருக்கிறது. இன்று மழை வரும்
இவ் இரண்டு வாக்கியங்களையும் இணைத்துக் காட்டுக.

5. "ஓடினான்" இவ்வாக்கியத்தில் பகுபத உறுப்பு 2 தருக.

6. "செத்தான்" எனும் வினையடியின் பகுதி யாது?

7.கல்விக்கடல், பால்நிலவு இச்சொற்களின் அணிகளை தருக.

8. பெயர்ச்சொற்களின் பண்புகள் இரண்டு தருக.

9.வினைச்சொற்களின் பண்புகள் இரண்டு தருக.

10.சுருக்கம் எழுதும் போது தவிர்க்க வேண்டிய விடயங்கள் 2 தருக.

**********

## பகுதி 3

மாதம் மூன்று மழையுள்ள நாடு
வருடம் மூன்று விளைவுள்ள நாடு
வேதம் மூன்றும் பலாவுள்ள நாடு
விசேஷம் ஒன்றும் குலாவுள்ள நாடு
போதம் மூன்றும் நலம்செயும் நாடு
புவனம் மூன்றும் வலஞ்செயும் நாடு
நாதம் மூன்றுரு வானகுற் றால
நாதர் ஆரிய நாடெங்கள் நாடே.

1) இப்பாடலை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றில் பொருளைத் தருக.
சூவிசேஷம் சூபோதம்

2) .கம்பராமாயணம் குகப்படலம் எனும் பகுதியை ஆதாரமாகக் கொண்டு,
   2.1) பரதன் குகனிடம் இலக்குவனை அறிமுகப்படுத்திய விதம்
   2.2) கோசலையின் சிறப்பு
   என்பவற்றை தருக.

3) "எது நல்ல சினிமா?" என்ற கட்டுரையை அடிப்படையாகக் கொண்டு,
   3.1) காட்சிப் படிமம்
   3.2) சினிமா மொழி போன்றவற்றின் பயன்பாடு பற்றி ஆசிரியர் யாது கூறுகின்றார்?

4) திருக்குறள் பேதைமை எனும் அதிகாரத்தினை அடிப்படையாகக் கொண்டு,

   4.1) பேதைமையின் இயல்பு

   4.2) பேதைமை கொண்டவனின் செயல் என்பவற்றை விளக்குக.